

# சாளரம்

## Chaalaram


தை – பங்குனி Jan – Mar 2015

ஒளி-08 கீற்று- 01


அன்பான பெற்றோர்களே! ஆசிரியர் களே!, மாணவர்களே! உங்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

பிறந்திருக்கும் இந்த 2015ஆம் ஆண்டு எல்லோருக்கும் நல்லதாக அமைய எல்லாம் வல்ல அந்த ஆண்டவனைப் பிரார்த்திக்கின் றோம்.

இந்த ஆண்டும் வழமை போல தமிழ்த் திறன் போட்டிகள் நடைபெற உள்ளன. தமிழ்த் திறன் போட்டிக்கான விதிமுறைகள். விண்ணப் பப்படிவம், மற்றும் பேச்சுப் போட்டிகளுக்கான உரைகள், திருக்குறள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை என்பன மாணவர்களுக்கு வழங்கப்படும். பெற்றோர்களே தயவு செய்து அனைத்து மாணவர்களையும் பங்கு பெறச் செய்ய வேண்டிய பொறுப்பும் உங்கள் கைகளில் தங்கியுள்ளது.

பேச்சுப் போட்டிகளில் முதல் பரிசு பெறும் மாணவ, மாணவியர்கள் 07.03.2015 அன்று நடைபெறும் கலைவிழாவில் தமது உரையை அனைவருக்கும் மத்தியில் தமது திறமையை நிரூபிப்பார்கள்.

இந்தத் தவணையிலிருந்து மிருதங்க, வயலின் வகுப்புப்கள் விரும்பும் மாணவர்கள் சேர்ந்து கொண்டு ஒழுங்காக வகுப்புக்களுக்கு வருமாறு வேண்டுகின்றோம். மிருதங்க வகுப்புக்களுக்கான தவணைக் கட்டணம் £15, வயலின் வகுப்புக்களுக்கான தவணைக் கட்டணம் £10 உம் அறவிடப்படும்.

## இந்தத் தவணைக்கான பாடசாலை நாட்கள்

| | |
|---|---|
| **09.01.2015** | **தவணைக்கான பாடசாலை ஆரம்ப நாள்** |
| 16.01.2015 | வெள்ளிக்கிழமை |
| 23.01.2015 | வெள்ளிக்கிழமை |
| **30.01.2015** | **வெள்ளிக்கிழமை மாதாந்தப் பரீட்சை** |
| 06.02.2014 | வெள்ளிக்கிழமை |
| 13.02.2015 | வெள்ளிக்கிழமை |
| 20.02.2015 | வெள்ளிக்கிழமை |
| **27.02.2015** | **வெள்ளிக்கிழமை மாதாந்தப் பரீட்சை** |
| **06.03.2015** | **பாடசாலை இடைத்தவணை விடுமுறை** |
| **07.03.2015** | **கலைவிழா** |
| 13.03.2015 | வெள்ளிக்கிழமை |
| 20.03.2015 | வெள்ளிக்கிழமை |
| **27.03.2015** | **தவணைக்கான பாடசாலை இறுதி நாள்** |



# சூரிய புராணங்கள்

இந்த வருடம் ஜனவரி (தை) மாதம் 14ஆம் திகதி புதன்கிழமை தைப்பொங்கல் விழாவை முன்னிட்டு இந்த சூரிய புரா ணங்கள் என்ற கட்டுரையை சாளரத்தில் தருவதன் மூலம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஒரு பெண் தன் கற்பின் திறத்தால் சூரியனையே உதிக்காதபடி செய்த கதையும் நம் புராணத்தில் உண்டு. அந்தப் பெண் நளாயினி. மௌத்தல்யர் என்ற முனிவர் இந்தப் பெண்ணை விரும்பி மணந்து கொண்டார். மனைவிமீது இருந்த மோகத் தால், தன் தவம் மற்றும் தினசரி செய்யும் கடமைகளையும் மேற்கொள்ளாமல் தவிர்த் தார். நளாயினியும் கணவரின் மனம் கோணாதபடி நடந்து கொண்டாள். ஆனால் நாளாக நாளாக, அழகுப் பதுமை யான தன் மனைவி மீது முனிவருக்கு சந்தேகம் வந்து விட்டது.. அவளைப் பலவாறாக துன்புறுத்த ஆரம்பித்தார். எல்லா இன்னல்களையும் பொறுத்துக் கொண்டாள் நளாயினி. ஒரு நாள் உடலும் உள்ளமும் சோர்ந்துவிட வெளியிலிருந்து வீட்டுக்குத் தண்ணீர் சுமந்த படி வந்து கொண்டிருந்த நளாயினி, வழியில் படுத்திருந்த மாண்டவியா என்ற முனிவரைக் கவனிக்காமல் அவரை மிதித்துவிட்டாள்.

அவ்வளவுதான்! உடனே கோபத் துடன் துள்ளி எழுந்தார் மாண்டவியா. "என்ன அலட்சியம்,திமிர்! நான் படுத்திருப் பதையும் கவனிக்காமல் என்னை மிதித்து விட்டுப் போகிறாயே! நாளைக் காலையில் பொழுது விடியும் போது உன் கணவன் இறந்திருப்பான். போ! நாளைக்கு நீ விதவையாகி வேதனைப்பட்டால்தான் உனக்குப் புத்தி வரும்" என்று சபித்து விட்டார்.

தான் எவ்வளவோ மன்றாடியும் உள்ளம் இரங்காத மாண்டவியரிடம் சவால் விட்டாள் நளாயினி. "நான் கற்பில் சிறந்தவள் என்பது உண்மையானால், நாளை சூரியன் உதிக்கவே கூடாது: என் கணவரும் இறக்கக் கூடாது."

அவளுடைய சபதத்துக்குக் கட்டுப்பட்டு, ஆதவன் உதிக்காம லேயே இருந்தான். அவ்வளவு தான் உலகமே இருண்டுவிட்டது. உலகைக் காக்க வேண்டிய பதற்றத்தில் பிரம்மன் நளாயினியிடம் வந்து வேண்டிக் கொண்டார். அவளும் உலக நன்மைக் காக சூரியனை மறுபடியும் உதிக் கும்படி கேட்டக் கொண்டாள். சூரியனும் அகமகிழ்ந்து தன் பணியை வழக்கம் போல மேற்கொண்டான். ஒரு கற்புக் கரசியின் கணவரைக் காப்பாற்றிய நிம்மதியை அடைந்தான் சூரியன்.

13ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் நவக்கிரகங்களின் தலைவனாகச் சூரியனை வழிபடத் தொடங்கினார்கள். கோயில்களில் கருவறைக்கு அருகில் அதன் வலப்பக்கம் சூரியனுக்கும், இடப்பக்கம் சந்திரனுக்கும் சந்நிதி அமைப்பது மரபு. மூலவரை வலம் வரும் போது முதல் வழிபாடு சூரியனுக்கே.

மகாபாரதத்தில் பஞ்ச பாண்டவர்களின் மூத்த சகோதரன் கர்ணன், அவன் குந்திதேவிக்கு சூர்ய அம்சமாகப் பிறந்தான். இராமாயணத் தில் இராமனிடம் அடைக்கலம் புகுந்து, தன் அண்ணனான வாலியை வெல்ல உதவி கோரினானே சுக்ரீவன். அவனும் சூரியனின் மகன்தான்.

சூரியன் வழிபாடு உலகம் முழுவதும் இருக்கிறது. Hong Hong இல் உள்ள சூரியன் கோயிலில் பக்தர்கள் ஊதுவத்தி ஏற்றிவைத்து வணங்குகி றார்கள். எகிபது (Egipt),ஜப்பான் (Japan), மெக்சிக்கோ( Mexsico) போன்ற நாடுகளிலும் சூரியனைக் கடவுளாக வழிபட்டிருக்கிறார்கள்

சூரியன் ஆரோக்கியத்தையும், வளத்தையும் அளிக்கவல்லவன். சூரியனுக்குப் பொங்கல் செய்து வழிபடுவோம்.

# தம்மைத் தாமே புகழும் மக்கள்

“என்னால் இதைச் செய்யவே முடியாது” என்பது கோழைத்தனம். “முடியும்” என்பது தன்னம்பிக்கை. “எனனால் மட்டுமே முடியும்.. வேறு எவனாலும் முடியாது” என்பது ஆணவம். நமது தன்னம்பிக்கையை உலகில் பலர் ஆணவமாகக் குழப்பிக் கொள்வது உண்டு. ஆனால் ஆணவத்தைத் தன்னம் பிக்கை என்று எவரும் பாராட்டமாட்டார்கள்..

தன்னம்பிக்கை உள்ளவர்கள்கூடத் தற்புகழ்ச்சி செய்து கொள்ளக் கூடாது. தற்புகழ்ச்சி தன்னம்பிக்கையை அதிகரிக்காது. அசிங்கப் படுத்தி விடும். இன்றைக்கு இலக்கியம், சமயம். அரசியல் என எல்லா இடங்களிலும் வெட்கமே இல்லாமல் பலர் தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்வது அருவருப்பாக இருக்கிறது.

தற்புகழ்ச்சி எவ்வளவு பெரிய பாவம் என்று தர்ம சாத்திரங்கள் சொல்லியிருப்பது பலருக்குத் தெரியவில்லை. மகாபாரதத் திலிருந்துஅருமையான நிகழ்ச்சி ஒன்று சொல்கிறேன். அதன் பின்னாவது தன்னைத் தானே வியந்து புகழ்ந்து மகிழ்ந்து பேசும் தலைக்கனம் உள்ளவர்கள் தற்புகழ்ச்சியின் கொடுமையை உணரட்டும்.

யயாதி என்பவர் யாக யாக்ஞுங்கள் செய்த மாமன்னர்.சந்திரகுல அரசர்களில் புகழ்பெற் சவர். பாண்டவர்களின் முன்னோரில் மிக முக்கியமானவர்.அவர் தவம் செய்யும் போது பசியாறமாட்டார். பழங்கள் கூட உண்ணமாட் டார். தண்ணீர் கூட அருந்தாது கடுந்தவம் புரிவார்.அதைவிட ஆச்சரியம், யாகங்களுக்கு பலனாக அது வேணடும், இது வேண்டும் என்று தேவர்களிடம் கோரிக்கையும் வைக்க மாட்டார். இதனால் தேவர்கள் பாடு திண்டாட் டமாகப் போய்விட்டது.

தேவர்கள் யயாதிக்கு கடன்காரர்களாகிவிட் டார்கள். அதனால் யயாதியின் மேன்மை கருதி அவருக்குத் தனிச் சலுகை கொடுத்தனர். அவர் மனித உடலோடு பிரம்ம லோகம், இந்திர லோகம் எங்கு வேண்டு மென்றாலும் சென்றுவர அனுமதி அளித்திருந்தனர். ஆனால் அப்போதும் யயாதி அடக்கமாக நடந்து கொண்டார்.

இந்திரனுக்கத்தான் மிக தர்ம சங்கடமான நிலை உண்டாயிற்று. காரணம் இந்திரப் பதவிக்குரிய தவங்களை எப்போதோ செய்து முடித்துவிட்டு பதவியை விரும்பாத பண்பாளராக யயாதி இருந்ததால் அவர் இந்திரலோகம் வரும் போதெல்லாம் எழுந்து நின்று வரவேற்க வேண்டி இருந்தது. அதுமட்டுமல்ல, அவரைத் தன்னைவிடக் கீழான ஆசனத்தில் அமர்த்த முடியவில்லை. எனவே ஒவ்வொரு முறையும் தனக்குச் சமமாகத் தன்னுடைய ஆசனத்திலேயே உட்கார வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவரது புண்ணிய பலம் தானே இத்தகைய தர்மசங்கடத்தை ஏற்படுத்தி விட்டது! எப்படி வீழ்த்துவது என்று இந்திரன் மனதிற்குள் புழுங்கிக் கொண்டே இருந்தான்.

ஒருநாள் யயாதி இந்திரலோகம் வந்து சமமாகத் தன் ஆசனத்தில் இருந்து உரையாடிய போது அளவுக்கு மீறி யயாதியைப் புகழ ஆரம்பித்தான். “ஆகா உம்மைப் போல் கடுந்தவம் செய்தவர் யார்? உலகெங்கும் தேடினாலும் உமக்கு ஒப்பாக எவரும் இல்லை!” என்று அடுக்கடுக்காகப் புகழ்ந்தான். யயாதிக்குக் கர்வம் தோன்ற ஆரம்மபித்தது. “ஆமாம் எவன் எவனோ தவம் செய்கிறான். என்னைமாதிரி கடுந்தவம் எவனும் செய்ததே இல்லை. என்க்கு நிகராக எவனும் பிறந்ததும் இல்லை. இனிப் பிறக்கப் போவதும் இல்லை எனறான். இந்திரன் கடுமையாக யயாதி என் சிம்மாசனத்திலிருந்து எழு! தற்புகழ்ச்சியின் மூலம் நீ உன் சகல புண்ணியங்களையும் இழந்துவிட்டாய். தவம் என்பதே தன்னை அடக்கும் தன்னடக்கம்.எனவே நீ கீழான உலகம் போகக் கடவாய் என்றான். எனவே நாம் தன்னடக்கத்துடன் நடக்கக் கற்போம்.



# Kids Side!

# சிறுவர் பகுதி!









Send any piece of wrtiting (jokes, stories) to the address at the bottom of the page and we will publish it in the next chalaram.

## Happy New Year

| | | | | | |
|---|---|---|---|---|---|
| BEGINNING | CELEBRATIONS | EXPECTATIONS | FAMILY | FOOD | FOOTBALL |
| FRIENDS | GAMES | HAPPY | HOLIDAY | HOPE | JANUARY |
| MIDNIGHT | NEW | PARADES | PARTIES | PLANS | RESOLUTIONS |
| TIME | YEAR | JOY | | | |

C F B E G I N N I N G F G Y O P R X C X
C E R X Y R A U N A J O H N A H X B V L
C L L A B T O O F M E O J O Y O P Z X I
G A M E S C Y L I P K D K E S Q Y L I K
N I A I B C D D O F H F A Z P S N U C Z
E I T D C R N H P P A R T I E S A V C I
W X J L R I A O D L Z I C I P I W M O O
T N T T G P J T T D A E D N M X N R M O
Z U Z H P F A M I L Y N W C F E C Y B L
C U T Y Y A D I L O H D S R H L I I X S
E X P E C T A T I O N S E C V G H D A O
P A R A D E S Y E N G S V F P A T D B U
V P R S V M O A E O O E H G U R F G B K
Z P M T U T U Z S L G Q P B R Q M O O Q
W P J Q E H O U U C J Z N J V S Y B O Q
T P B I L K M T Y U G N G H D C H L V I
C L Q P C Y I C Z D N E H J V X P L C L
I E O K K O Q J V E L J J C V K V C W S
O B E N N U B K L J X X O I X K L L X X
K U U S C X Z X K Z V U I W S W V Q V Q

Colour in the New Year Picture. The best three coloured in pictures will be shown in assembly and you will get a prize. The best one will be published in the next chalaram.

மேலுள்ள புத்தாண்டு படத்தை வர்ணம் தீட்டி அனுப்புங்கள். திறமையான மூன்று படங்கள் கூட்டத்தில் காட்டப்படும. அதுவுடன் ஒரு பரிசும் கடைக்கும். திறமையான ஒன்று அடுத்த சாளரத்தில் காட்டப்படும்.

SEND YOUR KIDS PAGE TO THIS ADDRESS:

64 GLENCOE AVENUE,
ILFORD,
ESSEX,
IG2 7AN